**செ.வெ.எண்: 49** **நாள்: 21.01.2017**

## பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த, 497 ஊராட்சிகளில் உள்ள, 4062 குக்கிராமங்களுக்கும்; தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டு குடிநீர் திட்டங்களின் மூலமாகவும், ஊராட்சிக்கு சொந்தமான ஆழ்குழாய் கிணறுகள் மூலமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்துள்ளதால் குடிநீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் குறைய வாய்ப்புள்ளது. இதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு போதிய அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மாவட்ட நிர்வாகம் போதிய நடவடிக்கை எடுத்து புதிய ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகளை கிராம ஊராட்சிப் பகுதிகளில் அமைத்து வருகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தின் செயல்பாடுகள் அனைத்தையும் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில் பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை சிக்கனமாக உபயோகிக்கவும், குடிநீரை குடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குடிநீர் விநியோகம் தொடர்பாக புகார் ஏதுமிருப்பின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உள்ள தொலைபேசி எண்: 04322 - 223766-க்கும், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலக தொலைபேசி எண்: 04322 - 222171-க்கும் தொடர்பு கொள்ள பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் குடிநீர் வழங்கல் கண்காணிப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது. கிராம ஊராட்சி பகுதிகளில் குடிநீர் வழங்குதலில் புகார் ஏதும் இருப்பின், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் உள்ள குடிநீர் வழங்கல் கண்காணிப்பு பிரிவில் தெரிவிக்க பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறாரகள்.

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | குடிநீர் வழங்கல் கண்காணிப்பு பிரிவு தொலைபேசி எண் |
|---|---|---|
| 1 | அன்னவாசல் | 04339 - 230622 |
| 2 | அறந்தாங்கி | 04371 - 220538 |
| 3 | அரிமளம் | 04333 - 271223 |
| 4 | ஆவுடையார்கோவில் | 04371 - 233323 |
| 5 | கந்தர்வகோட்டை | 04322 - 275728 |
| 6 | கறம்பக்குடி | 04322 - 255226 |
| 7 | குன்றாண்டார்கோவில் | 04339 - 246251 |
| 8 | மணமேல்குடி | 04371 - 250390 |
| 9 | புதுக்கோட்டை | 04322 - 221805 |
| 10 | பொன்னமராவதி | 04333 - 262070 |
| 11 | திருமயம் | 04333 - 274227 |
| 12 | திருவரங்குளம் | 04322 - 242281 |
| 13 | விராலிமலை | 04339 - 220224 |

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**